இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 47 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 09 – சனிக்கிழமை 26 செப்டம்பர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 47 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 09 - Saturday 26 September 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## குறுகிய அரசியல் நோக்கில் தி.மு.க. மீது அவதூறு பரப்பும் ஒரு கூட்டத்தின் அருவெறுப்பான செயல்!

## தவறிழைத்தோரை காப்பாற்ற தி.மு.க. ஆட்சியில் எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை!

# ‘ஜெம்’ வீரமணி வழக்கில் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை!

## யாரையும் தப்பவிடக் கூடாது – என தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, செப்.26-

**‘ஜெம்’ வீரமணி வழக்கில் தி.மு.க. ஆட்சியில் யாரையும் காப்பாற்ற எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை எனவும், குறுகிய அரசியல் நோக்கில் இந்த வழக்கில் தி.மு.க. மீது அவதூறு பரப்பும் அருவெறுப்பான செயலில் ஒரு கூட்டம் செயல்படுகிறது எனவும், ‘ஜெம்’ வீரமணி வழக்கில் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத்தர வேண்டும். இதுவே தி.மு.க.வின் நிலைப்பாடு எனவும், தலைவர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

“கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை” வருமாறு:

சிறுமிகளுக்கு எதிரான மனிதத்தன்மையற்ற இழிவான செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஜெம் வீரமணி கைது செய்யப்பட்டுள்ளார். இதில் வீரமணியும், அவருக்கு உடந்தையாக இருந்தவர்கள், அவரைக் காப்பாற்ற முயன்றவர்கள் எவராயினும், எத்தகைய பொறுப்பில் இருந்தவர்கள் ஆயினும் தப்பிக்க கூடாது. அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அதிகபட்ச தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும். இது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு. இந்த வழக்கின் முடிவு, இனி இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபடும் எண்ணமே எவருக்கும் வராத வகையில் அமைய வேண்டும் என்பதுதான் ஓர் அரசியல் இயக்கத்தின் தலைவனாகவும், ஒரு குடும்பத் தலைவனாகவும், மனசாட்சி உள்ள மனிதனாகவும் எனது விருப்பம்.



### தி.மு.க. மீது அவதூறுகளைப் பரப்பும் ஒரு கூட்டத்தின் அருவெறுப்பான செயல்!

ஆனால், இந்த வழக்கில் தேவையே இல்லாமல், குறுகிய அரசியல் நோக்கத்துடன் தி.மு.கழகத்தின் மீது பொய்யாக அவதூறுகளைப் பரப்பி, ஒரு கூட்டம் குளிர்காய்ந்து வருவது மிகவும் அருவெறுப்பான செயலாகும். வீரமணி வழக்கில் யாரையும் காப்பாற்ற எந்த உத்தரவும் கழக ஆட்சியில் பிறப்பிக்கப்படவில்லை.

பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் பாரபட்சமின்றி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு, தண்டனை பெற்றுத் தரப்பட்டது. இவை அனைத்தும் பொதுவெளியில் இருக்கும், மறுக்க முடியாத உண்மைகள் ஆகும். எவரையும் காப்பாற்ற வேண்டிய தேவை கழக ஆட்சிக்கு இல்லை.

### த.வெ.க. பெண் பாலியல் குற்றச்சாட்டில் நடவடிக்கையின்றி மூடி மறைக்கும் இழிசெயல்!

தற்போதைய த.வெ.க. ஆட்சியில் நடப்பதுபோல, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மீது அனைத்துப் பத்திரிகைகளின் முன்பும் பாதிக்கப்பட்ட பெண்கள் பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைத்த பின்னரும், நடவடிக்கை எடுக்காமல், சமரசம் பேசி வழக்கை முடித்து வைக்கும் இழிசெயல்கள் கழக ஆட்சியில் நடைபெறவில்லை.

எனவே, சிறுமிகளுக்கு ஏற்பட்ட துயரத்தை இடைத்தேர்தலுக்கான கருவியாகப் பயன்படுத்தும் இழிவான செயலையும், முற்றிலும் பொய்யான அவதூறுகளை ஊடகங்கள் மூலமாக பரப்புவதையும் ஆளும்கட்சியினர் நிறுத்திக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு நீதி பெற்றுத் தருவது மட்டுமே நம் அனைவரின் நோக்கமாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

> **“இந்த வழக்கின் முடிவு, இனி இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபடும் எண்ணமே எவருக்கும் வராத வகையில் அமைய வேண்டும் என்பதுதான் ஓர் அரசியல் இயக்கத்தின் தலைவனாகவும், ஒரு குடும்பத் தலைவனாகவும், மனசாட்சி உள்ள மனிதனாகவும் எனது விருப்பம்.”**

இவ்வாறு கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் – இல்லையேல் போராட்டம்!

# எதிர்க்கட்சிகளை திட்டமிட்டு தோற்கடித்து நிர்மூலமாக்குவதே பா.ஜ.க.வின் திட்டம்!

## கரப்பான் பூச்சி ஜனதாக் கட்சித் தலைவர் அபிஜீத் தீப்கே எச்சரிக்கை!

புதுடெல்லி,செப்.26-

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் 48 மணி நேரத்துக்குள் பதவி விலக வேண்டும் என்று கரப்பான் பூச்சி ஜனதாக் கட்சித் தலைவர் அபிஜீத் தீப்கே எச்சரித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் நடைமுறைகள் மற்றும் சிறப்பு தீவிர திருத்தம் செயல்முறை தொடர்பான முடிவுகள் மற்றும் உத்தரவுகள் குறித்து, தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் 10 மாதங்களில் குறைந்தது 14 முறை ஆட்சேபனைகளைத் தெரிவித்ததாக வெளியான செய்தி நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் (சிஜேபி) நிறுவன ஒருங்கிணைப்பாளர் அபிஜீத் தீப்கே, இணை ஒருங்கிணைப்பாளர் ஆசுதோஷ் ரங்கா ஆகியோர் டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது அபிஜீத் தீப்கே, “தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மிகப் பெரிய தேசவிரோதி. இந்திய ஜனநாயகத்துக்கு அவர் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளார். எனவே, அவர் உடனடியாக பதவி விலக வேண்டும்.

48 மணி நேரத்துக்குள் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால், நாடு தழுவிய போராட்டம் மற்றும் காலவரையற்ற உள்ளிருப்புப் போராட்டத்தை சிஜேபி தொடங்கும்.

சுதந்திரமான, நியாயமான தேர்தலை உறுதி செய்ய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும்.

சிஜேபி இணை ஒருங்கிணைப்பாளர் ஆசுதோஷ் ரங்கா பேசுகையில், “நாங்கள் மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைக்கிறோம். எங்களின் முதல் கோரிக்கை, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும். அவர் மீது உடனடியாக குற்றவியல் நடவடிக்கை தொடங்கப்பட வேண்டும் என்பதாகும்.



### சுதந்திரமான விசாரனை தேவை!

எங்களின் இரண்டாவது கோரிக்கை, வர இருக்கும் அனைத்துத் தேர்தல்களையும் உடனடியாக நிறுத்திவைக்க வேண்டும். அனைத்து மாநிலங்களிலும் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) நடைமுறைக்கு முந்தைய வாக்காளர் பட்டியல்களைப் பயன்படுத்த வேண்டும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட எஸ்ஐஆர் நடைமுறைகள் அனைத்தையும் ஆய்வு செய்ய ஒரு சுதந்திரமான விசாரணை ஆணையம் அமைக்கப்பட வேண்டும்.

எஸ்ஐஆர் தொடர்பான முடிவெடுக்கும் செயல்முறை தொடர்பான கோப்புகளை தேர்தல் ஆணையம் அழிப்பதற்கு முன்பாக உச்ச நீதிமன்றம் அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை நியமிப்பதற்கான 2023ம் ஆண்டு சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்பது எங்களின் மூன்றாவது கோரிக்கை. இதற்கென சிவில் சமூகக் குழுக்களை உள்ளடக்கிய ஒரு புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும்.

### மு.க.ஸ்டாலின் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார்!

பாஜகவிற்கு எதிராக பேசியவர்கள் ஒவ்வொருவராக தோற்கடிக்கப்பட்டனர். பாஜகவின் செயல்முறை ஒரேமாதிரியாக உள்ளது. இது திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளது

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தொகுதியிலிருந்து 1 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்டன.

எதிர்கட்சிகளை திட்டமிட்டு தோற்கடித்து அவர்களை நிர்மூலமாக்குவதே பாஜகவின் திட்டம்.

வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர்கள் நீக்கப்பட்ட விவகாரம் மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் பினராயி விஜயனை பாதித்துள்ளது

எதிர்க்கட்சித் தலைவர்களை இவ்வாறு ஓரங்கட்டுவது அல்லது நீக்குவது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல.

2024-ல் பாஜகவிற்கு எதிராக பிரச்சாரம் செய்த தலைவர்களும் கட்சிகளும் ஒவ்வொன்றாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளன. ஞானேஷ் குமார் மீது குற்றவியல் நடவடிக்கை நடுக்க வேண்டும்.

இவ்வாறு சி.ஜே.பி. தலைவர் அபிஜித் தீப்கே பேட்டியளித்தார்.

---

## தலைமை தேர்தல் ஆணையருக்கு எதிராக வழக்குத் தொடர முடிவு!

### அனுமதி கோரி ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்ற வழக்கறிஞர் கடிதம்!

புதுடெல்லி, செப்.26-

தலைமை தேர்தல் ஆணையருக்கு எதிராக வழக்கு தொடர அனுமதி கோரி ஒன்றிய அரசின் அட்டார்னி ஜெனரலுக்கு உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரிஜேஷ் சிங் கடிதம் எழுதி உள்ளார்.

ஒன்றிய அரசின் அட்டார்னி ஜெனரல் வெங்கட் ரமணிக்கு உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரிஜேஷ் சிங் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகளை மீறும் வகையில் தலைமை தேர்தல் ஆணையர் செயல்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சக தேர்தல் ஆணையர்களை செயல்படவிடாமல் தடுத்துள்ளார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மூன்று நபர் ஆணையமாக செயல்படும் தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் அனைத்துமே ஒருமித்த கருத்தாக இருக்க வேண்டும் தவிர, தலைமை தேர்தல் ஆணையரின் முடிவாக மட்டும் இருக்க கூடாது என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

டி.என்.சேஷன் வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் முக்கிய அம்சங்களை தலைமை தேர்தல் ஆணையர் மீறியுள்ளார் என்று அக்கடிதத்தில் வழக்கறிஞர் பிரிஜேஷ் சிங் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்ற விதிகளின்படி, தலைமை தேர்தல் ஆணையர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர, ஒன்றிய அரசின் அட்டார்னி ஜெனரலின் அனுமதி தேவை என்பதால் இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.